# யூன் – 20 – வியாழன்

**தூய தில்வேரியுஸ்**

**அல்லேலூயா! நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்: திபா. 111:1**

----------------------------------------------------------------------------

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 11: 1- 11

சகோதரர் சகோதரிகளே! என் அறிவீனத்தை நீங்கள் சற்றுப் பொறுத்துக் கொள்ளவேண்டும் ஆம் சற்றே பொறுத்துக் கொள்ளுங்கள். உங்கள்மீது கடவுள் கொண்டுள்ள அதே அன்பார்வத்தை நானும் கொண்டுள்ளேன். கிறிஸ்து என்னும் ஒரே மணமகனுக்கும் உங்களுக்குமிடையே மண ஒப்பந்தம் செய்துள்ளேன். அவர்முன் உங்களைக் கற்புள்ள கன்னியாக நிறுத்தவேண்டும் என்பதே என்விருப்பம்.ஆனால் ஏவா பாம்பின் சூழ்ச்சியினால் ஏமாற்றப்பட்டதைப்போல நீங்களும் உங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டுக் கிறிஸ்துவிடம் விளங்கிய நேர்மையையும் தூய்மையையும் இழந்துவிடுவீர்களோ என அஞ்சுகிறேன்.உங்களிடம் யாராவது வந்து, நாங்கள் அறிவித்த இயேசுவைத்தவிர வேறு ஓர் இயேசுவைப் பற்றி அறிவித்தால்,அல்லது நீங்கள் பெற்ற தூய ஆவியைத்தவிர வேறு ஓர் ஆவியைப்பற்றிப் பேசினால், அல்லது நீங்கள் ஏற்ற நற்செய்தியைத் தவிர வேறு ஒருநற்செய்தியைக் கொண்டு வந்தால் நீங்கள் அவர்களை எளிதாக ஏற்றுக்கொள்கிறீர்கள். இப்படிப்பட்ட ”மாபெரும்” திருத்தூதரைவிட நான் எதிலும் குறைந்தவன் அல்லேன் என்றே கருதுகிறேன்.நான் நாவன்மையற்று இருக்கலாம் ஆனால் அறிவு அற்றவன் அல்ல. இதை எப்போதும் எல்லா வகையிலும் உங்களுக்குத் தெளிவுபடுத்தியே இருக்கிறோம். ஊதியம் எதுவும் எதிர்பார்க்காமல் நான் உங்களுக்கு நற்செய்தி அறிவித்தேன். நீங்கள் உயர்வுபெற நான் தாழ்வுற்றேன். இதுதான் நான் செய்த பாவமா?நான் உங்களிடையே பணிபுரிந்தபோது என் செலவுக்கு வேண்டியதை மற்றத் திருச்சபைகளிடமிருந்து பெற்றுக் கொண்டேன். உங்களுக்காக அவர்களைக் கொள்ளையிட்டேன் என்றே சொல்லலாம்.நான் உங்களோடு இருந்தபோது எனக்குப் பற்றாக்குறை இல்லாமல் இல்லை. எனினும் நான் உங்களில் எவருக்கும் சுமையாய் இருந்ததில்லை. மாசிதோனியாவிலிருந்து வந்த அன்பர்கள் என் பற்றாக்குறையைப் போக்கினார்கள். நான் எதிலும் உங்களுக்குச் சுமையாய் இருந்ததில்லை இனி இருக்கவும் மாட்டேன். கிறிஸ்துவின் உண்மையே என்னுள்ளும் இருப்பதால் நான் பெருமைப்படுவதை அக்காயா பகுதியிலுள்ள யாரும் தடுக்க முடியாது.ஏன் இப்படிச் சொல்கிறேன்? உங்களிடம் எனக்கு அன்பே இல்லை என்பதாலா? நான் உங்கள் மீது அன்புகொண்டவன் என்பது கடவுளுக்குத் தெரியும்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் செயல்கள் நம்பிக்கைக்குரியவை நீதியானவை

## நற்செய்தி : மத்தேயு 6 : 7 - 15

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள்.நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார்.ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்” விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்.எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும்.எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். (”ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.”). மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்” என்றார்.

**தியானம்:** செபம் என்பது கடவுளையும் மனிதரையும் இணைக்கும் பாலம். செபம் என்பது வெறும் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போவது அல்ல மாறாக இதயத்தை, உணர்வுகளை கடவுள் பக்கம் திருப்புவது. இயேசு தன்னுடைய வாழ்க்கையிலே மிகுதியான நேரத்தை ஜெபத்தில்தான் செலவழித்தார். “இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்” (மாற்.1:35). ஜெபத்தின் வழியாகத்தான் இயேசு கடவுளோடு கொண்ட உறவை புதுப்பித்துக் கொண்டார். ஜெபத்தின் மூலமாகத்தான் இயேசு கடவுளின் திருவுளத்தைக் கண்டுகொண்டார். ஜெபத்தின் வழியாகத்தான் இயேசு ஆவிக்குரிய வாழ்வினை கண்டடைந்தார். ஜெபத்தின் வழியாக மட்டுமே ஒரு மனிதன் மறுபிறப்பு அடைகின்றான். எனவேதான் ஆண்டவர் இயேசு கூறினார் மறுபடியும் பிறந்தாலன்றி யாரும் இறையாட்சியைக் காண இயலாது என உறுதியாகச் சொன்னார் (யோவா.3:3). ஜெபம் என்பது வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கக்கூடாது அதுவே வாழ்வாக வேண்டும் என்பதுதான் இயேசுவின் இதய ஏக்கம். எனவேதான் இயேசு தன்னுடைய ஜெப அனுபவத்தை தன்னுடைய சீடர்களுக்கும் கற்றுக்கொடுக்கின்றார். எப்போதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள் (லூாக்.21:36), சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள் (மாற்.14:38) என்று ஆண்டவர் இயேசு சீடர்களுக்கு சொல்லிக் கொண்டேயிருந்தார். இதையே தூய பவுலடியார், எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள் இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள், எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள், உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே (1தெச.16-18) என்று கூறுகின்றார். . எனவேதான் நாம் ஜெபிக்கும்போதே நம்மை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று நாம் தந்தை கடவுளை நோக்கி ஜெபிக்கின்றோம். அந்த ஜெபம்தான் கடவுளின் பிரசன்னத்தை நமது வாழ்க்கையில் கொண்டுவந்து இருளின் சக்தியான சாத்தானை விரட்டியடிக்க உதவும். ஒளி இருக்கும்வரைதான் இருள் நம்மை நெருங்க முடியாது. ஒளியை இழந்தால் தானாகவே நமது வாழ்வை இருள் சூழ்ந்து கொள்ளும். ஒளியை நாம் தான் ஏற்ற வேண்டும் ஆனால் இருள் நம்முடைய எந்த முயற்சியும் இல்லாமல் தானாகவே நமது வாழ்வை அபகரித்துக் கொள்ளும். எனவே பலிபீடத்தில் ஏற்றிவைக்கப்பட்ட நெருப்பு அணைந்து போகாதபடி ஜெபத்தினால் அனல் மூட்டிக்கொண்டே இருப்போம் சாத்தானை வெற்றி கொள்வோம்.